DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
CALENDAR CASE No.27/2014
Prosecution Witness PW 2
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கண்ணன். | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 30.08.2024.**

எதிரிகள் ஆஜரில்லை.

முதல்விசாரணை-

நான் தற்போது கல்லுப்பட்டி டவுன் மின்வாரிய அலுவலகத்தில் மின்பாதை ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.09.2005 அன்று அதே அலுவலகத்தில் நான் வயர்மேனாக பணியில் இருந்து வந்தேன். அன்றைய தினம் இரவு குன்னத்தூர் அருகேயுள்ள மாணிக்க விநாயகர் ஸ்பின்னிங் மில்லில் உள்ள உயர் மின் அழுத்த இணைப்பு எண்.116 -ல் சோதனை செய்யப்போவதாக AE(MRT) பசுமலை மற்றும் AE அமலாக்கப்பிரிவு ஆகியோரிடமிருந்து சோதனை செய்யப்போவதாக வந்த தகவலின்பேரில் என்னிடத்தில் foreman திரு. கணேசன் என்பவர் சொன்ன தகவலின்பேரில் நானும், மேற்படிகணேசனும் மேற்சொன்ன மாணிக்க விநாயகர் ஸ்பின்னிங் மில்லிற்கு இரவு சுமார் 11.45 மணியளவில் சென்றோம். அங்கு AE (MRT) பசுமலை அவர்கள் AE அமலாக்கப்பிரிவு அவர்களும் மேற்படி மில்லில் உள்ள மின் இணைப்பில்

உள்ள மீட்டரை சோதனை செய்தார்கள். நாங்கள் உதவியாக அங்கிருந்தோம், வேறு எதுவும் செய்யவில்லை. சோதனை முடிந்தபின்பு , அதிகாரிகள் அவர்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டார்கள். நான் என்னுடைய அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். மேற்படி சோதனை செய்யப்பட்ட மீட்டரின் விபரங்கள் எனக்குத் தெரியாது. இது சம்பந்தமாக என்னை கல்லுப்பட்டி ஆய்வாளர் அவர்கள் 27.09.2005 அன்று விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை -

என்னுடைய பணி மின்மாற்றிகள் பராமரிப்பு மற்றும் சுத்தம் செய்வது என்றால் சரிதான். மேலும், மின்மாற்றிகளின் oil leakage and oil level, earth connection ஆகியவைகளை சரி பார்ப்பது என்றால் சரிதான். சோதனைகளை செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். ஒரு மீட்டர் பெட்டியானது இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மீட்டரின் மேற்பகுதி மீட்டரிங் யார்ட் மற்றும் மீட்டரின் கீழ் பகுதியானது டெஸ்டு டெரிமினல் பிளாக் என்று சொல்லப்படும் என்றால் சரிதான். ஒவ்வொரு மீட்டருக்கும் தனித்த வரிசை எண் வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். டி. கல்லுப்பட்டி,

குன்னத்தூர் பகுதியானது விவசாய பகுதி என்றால் சரிதான். அந்தபகுதியில் மின் விநியோகம் என்பது single phase and 3 phase ஆகவும் இருக்கும் என்றால் சரிதான். தினந்தோறும் single phase -க்கு ஒரு காலநேரமும் மற்றும் 3 phase க்கு ஒரு கால நேரமும் உள்ளதென்றால் சரிதான். சோதனை செய்யப்பட்ட மீட்டரின் எண் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்சமயம் நீதிமன்றத்தில் சொல்வதுபோல்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - கண்ணன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.